## உங்கள் வருகையின் போது உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாப்பாக வைத்திருத்தல்:

நீங்கள் மருத்துவமனையில் இருக்கும்போது உங்கள் மருத்துவமனை அடையாளக் கைப்பட்டியை அணியுங்கள்.

பின்வரும் நிலைமைகள் உங்களுக்கு இருந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்:

- நீங்கள் கடந்த ஆண்டில் ஒரு தடவை கீழே விழுந்துவிட்டீர்கள்.
- உங்களுக்குக் கைத்தடி, நடைவண்டி, ஊன்றுகோல் அல்லது சக்கர நாற்காலி தேவை.
- உங்களுக்குக் குழப்பம், மயக்கம் ஏற்படுகின்றது அல்லது நீங்கள் சமநிலையை இழக்கக்கூடும்.

உங்களுக்குத் தேவையான எந்த உதவியையும் வழங்குவதில்நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

நிலையங்களில் இருக்கும் கை சுத்திகரிப்பானைப் பயன்படுத்தித் தொற்றுக் கட்டுப்பாட்டை மேம்படுத்த உதவவும்.

உங்கள் அணுகலைக் கட்டுப்படுத்தக்கூடிய எந்தவொரு நுழைதல், வெளியேறுதல் அல்லது நாங்கள் வழங்கும் சேவைகள் குறித்துக் கண்டறிந்து தடையற்ற சூழலை உருவாக்குவதற்கு எங்களுக்கு உதவவும்.

நீங்கள் செவிப்புலனற்றவராக, செவிப்புலன் இழந்தவராக அல்லது செவிப்புலன் குறைந்தவராக இருந்தால், உங்கள் ஸ்மார்ட்போனில் பயன்படுத்துவதற்கு எங்கள் இலவச விளக்கச் சேவைகள் அல்லது இலவச தலைப்புச் சேவை ஆப்ஸைக் கேளுங்கள்.

அனைவருக்கும் சமமான பராமரிப்பை வழங்குவதில் நாம் பெருமிதம் கொள்கின்றோம். உங்கள் உதவியுடன், நாங்கள் எங்கள் சேவையை மேம்படுத்திப் பாதுகாப்பான ஒரு சுகாதாரச் சூழலை வழங்க முடியும். உங்கள் வருகையின் போது:

- நாங்கள் எப்படிச் செயற்படுகிறோம் என்பதை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.
- உங்களுக்கு இன்னும் சிறந்த சேவையை வழங்க முடியும் என்றால் எங்களிடம் கூறுங்கள்.
- உங்களுக்குப் புரியாத எதைப் பற்றியும் எங்களிடம் கேள்விகளைக் கேளுங்கள்.

Form 300372 (05/2023)

**Birchmount hospital**
3030 Birchmount Road
Scarborough, ON M1W 3W3
416-495-2400

**Centenary hospital**
2867 Ellesmere Road
Scarborough, ON M1E 4B9
416-284-8131

**General hospital**
3050 Lawrence Avenue East
Scarborough, ON M1P 2V5
416-438-2911

@SHNcares
SHN.ca

# SHN நோயறிதலுக்கான

## Magnetic Resonance Imaging

## अल्ट्रासाउंड ट्रांसड्यूसर/प्रोब के बीच संपर्क प्रदान करने के लिए

### நோயாளிகள் மற்றும் குடும்பங்களுக்கான

SHN
SCARBOROUGH HEALTH NETWORK

## காந்த அதிர்வு உருவரைவு(MRI) என்றால் என்ன?

MRI என்பது ஒரு மேம்பட்ட உருவரைவுக் கருவியாகும், இது மனித உடலைப் படம்பிடிக்க காந்தப்புலங்கள் மற்றும் ரேடியோ அலைகள் இரண்டையும் பயன்படுத்துகிறது. எம்ஆர்ஐ அயனியாக்கும் கதிர்வீச்சை (x-கதிர்கள்) பயன்படுத்துவதில்லை. மூளை, முதுகுத் தண்டு, தசைக்கூட்டு அமைப்பு, மார்பகம், வயிறு, இடுப்பு மற்றும் பிற மென்மையான திசுப் பகுதிகளைப் படம்பிடிப்பதில் MRI குறிப்பாகப் பயனுள்ளதாக இருக்கும். காந்த அதிர்வு ஆஞ்சியோகிராபி (MRA) எனப்படும் சிறப்பு இமேஜிங் நுட்பங்களைப் பயன்படுத்தி பல இரத்த நாளக் கோளாறுகளை மதிப்பிடுவதற்கும் இது பயன்படுத்தப்படுகிறது. பல சந்தர்ப்பங்களில், இது உடலை இமேஜிங் செய்வதில் அதிக உடற்கூறியல் விவரங்களை வழங்க முடியும், மேலும் பல்வேறு வகையான நோய்களைக் கண்டறிய முடியும்.

## முக்கியமான முன்னெச்சரிக்கைகள்:

MRI ஸ்கேனில் வலுவான காந்தம் பயன்படுத்தப்படுவதால், பரிசோதனை அறைக்குள் நுழைய முடியாத சில உலோகப் பொருள்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் உள்ளன. இதில் சில உள்வைப்புகள் அடங்கும். உங்களிடம் இவை எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்த ஊழியர்கள் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பார்கள். உங்களுக்கு ***எப்போதாவது*** பின்வருவன ஏற்பட்டிருந்தால் எம்மிடம் சொல்ல வேண்டும்:

- உங்கள் கண்ணில் உலோகத்தினால் ஒரு காயம் ஏற்பட்டது
- ஏதாவது அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது; மற்றும்/அல்லது
- இதயமுடுக்கி (pacemaker) போன்ற மருத்துவ சாதனங்கள் ஏதாவது பொருத்தப்பட்டிருந்தன

## நான் எதிர்பார்க்க வேண்டியது என்ன?

ஒரு தொழில்நுட்பவியலாளர் செயல்முறைகளை உங்களுக்கு விளக்கித் தயார்படுத்தி, பரிசோதிக்க வேண்டிய உடற் பகுதியை ஸ்கேனரின் மையத்திற்கு நகர்த்தி ஸ்கேனிங் டேபிளில் உங்களைப் படுக்க வைப்பார், ஸ்கேனரின் உட்புறம் நன்கு ஒளிருவதுடன் ஒவ்வொரு முனையும் திறந்திருக்கும் அத்துடன் படங்களைப் பெறும்போது மிகவும் சத்தமாகத் தட்டும் ஓசைகளை ஏற்படுத்தும். பரிசோதனையின் போது அணிய உங்களுக்குச் செவிப்புலன் பாதுகாப்பு உபகரணம் வழங்கப்படும். பரிசோதனை செய்வதற்கு 15 நிமிடங்களிலிருந்து படம் எடுக்கப்படும் பகுதியைப் பொறுத்து, ஒரு மணிநேரம் வரை எடுக்கும்.
சோதனை முடிந்ததும், நீங்கள் செல்லலாம்.
**கதிரியக்க நிபுணர் படங்களை விளக்கி ஒரு அறிக்கையை உங்கள் மருத்துவருக்கு அனுப்பி வைப்பார்.**

## கடோலினியம் (Gadolinium) என்பது என்ன?

சில நேரங்களில் அசாதாரணங்களைப் பார்க்க முடியாமல் இருக்கலாம்
மற்றும் காடோலினியம் ஊசி (contrast medium) உட்புற உடல் அமைப்புகளை சிறப்பாகக் காட்சிப்படுத்த உதவும்.
காடோலினியம் மிகவும் பாதுகாப்பானதாகக் கருதப்படுகிறது மற்றும் பக்க விளைவுகள் மிகவும் அரிதானவை.
உங்களுக்குக் கரிசனைகள் ஏதாவது இருந்தால், எந்த நேரத்திலும் எங்களுடன் கலந்தாலோசிக்கலாம்.

## எனக்கு மூடியிருக்கும் இடத்தில் இருப்பதற்குப் பயமாக (claustrophobic) இருந்தால் என்ன செய்வது?

சில நோயாளிகள் கிளாஸ்ட்ரோ:ஃபோபியாவை அல்லது MRI ஸ்கேனரின் உள்ளே செல்வதைக் குறித்துப் பதட்டத்தை அனுபவிக்கலாம். உங்களுக்கு மயக்க மருந்து தேவைப்பட்டால், உங்கள் சந்திப்புத் திகதிக்கு முன்னதாக உங்கள் மருத்துவர் உங்களுக்கு மருந்துச் சீட்டை வழங்க வேண்டும். நீங்கள் மயக்க மருந்து எடுக்கத் திட்டமிட்டால் உங்களுடன் கூட ஒருவரை அழைத்து வர வேண்டும், ஏனெனில் நீங்கள் வீட்டிற்கு வாகனம் ஓட்ட அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

## நான் கர்ப்பமாக இருந்தால்?

நீங்கள் கர்ப்பமாக இருந்தால், தயவுசெய்து உங்கள் சந்திப்பிற்கு முன்னதாக எங்களுக்குத் தெரிவிக்கவும், உங்களுக்கு MRI செய்யலாமா வேண்டாமா என்பதை நாங்கள் மேலும் மதிப்பீடு செய்ய வேண்டியிருக்கும்.

## MRIக்கு என்னைத் தயார் செய்வது எப்படி?

**வயிறு மற்றும் இடுப்பு MRI:** உங்கள் பரிசோதனைக்கு நான்கு மணி நேரத்திற்கு முன்பு எதையும் சாப்பிடவோ குடிக்கவோ கூடாது

**மார்பக மற்றும் இதய MRI:** உங்கள் பரிசோதனைக்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்பு எதையும் சாப்பிடவோ அல்லது குடிக்கவோ **கூடாது**
**மயக்க மருந்தூட்டப்படும் குழந்தை நோயாளிகள்** குழந்தை வாழ்வியல் நிபுணர் ஒருவர் உங்களுக்கு உதவுவதுடன் சோதனைக்குத் தயார் செய்வதற்குரிய வழிமுறைகளையும் வழங்குவார்.

குறைந்தளவு தண்ணீருடன் மருந்து எடுத்துக் கொள்ளலாம்

**ஏனைய MRI பரிசோதனைகள் அனைத்துக்கும்:** ஆயத்தம் எதுவும் தேவையில்லை

## பரிசோதனை நியமனங்கள்

உங்கள் வீடு அல்லது பணியிடத்திற்கு அருகாமையில் உள்ள மருத்துவமனையில் சந்திப்புகளை நடத்துவதற்கு இடமளிப்பதற்கு எங்களால் இயலுமானஅனைத்தையும் நாம் செய்வோம், இருப்பினும், பரிசோதிக்கப்பட வேண்டிய உடல் உறுப்பு, ஸ்கேன் வகை, உடல் எடை மற்றும் நோயின் தன்மை போன்ற காரணிகள் உங்கள் சந்திப்பு எந்த மருத்துவமனையில் திட்டமிடப்படும் என்பதைத் தீர்மானிக்கக்கூடும்.